## விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2017

விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1979 திசெம்பர் 26 ஆம் திகதிய 68/11 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட வழிகாட்டியின் 20 ஆம் பிரிவு மற்றும், 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவு, 108 மற்றும் 111 பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கையொன்று 2018 ஜுன் 11 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டது. ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இனங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

**இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதி நிதி நிலைமை கூற்றுக்களின் பிரகாரம், வியாபார மற்றும் கிடைக்க வேண்டியவைகளின் அதிகரிப்பு ரூபா 303,933 ஆன போதும், அது ரூபா 278,469 ஆக நிதிப்பாய்ச்சல் கூற்றுக்களில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் செம்மையாக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அரச மானியங்கள் கணக்குப் பதிவிடலிற்காக நிறுவனம் இணங்கண்டு வெளியிட்ட கொள்கைகளின் பிரகாரம் மூலதன மானியங்களை பயன்படுத்தி கொள்வனவு செய்யும் சொத்துக்களுக்கான செலவு பிற்போடப்பட்ட வருமானமாக இனங்காணப்படும் என குறிப்பிடப்பட்ட போதும் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட மூலத்தினை கருத்திற் கொள்ளாது ரூபா 11,472,426 தொகை பிற்போடப்பட்ட வருமானமாக இனங்காணப்பட்டுருந்தது.

(ஆ) நிறுவன, பாடநெறி கட்டணவருமானத்தை கணக்குப் பதிவிடல் தொடர்பாக சரியான கணக்கீட்டுக் கொள்கைகளை இனங்கண்டிருக்காததுடன் அது தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை நிறுவியிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதி நிலைமை கூற்றின் குறிப்பு 07 பிரகாரம் கணனி மற்றும் மென்பொருள் தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று தேய்மான பெறுமதி ரூபா 3,232,713 ஆன போதும், அது நிதி செயலாற்றுகை கூற்றில் ரூபா 2,672,713 ஆக குறிப்பிடப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை ரூபா 560,000 இனால் அதிகரித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் கிடைத்த மூலதன மானியங்களிற்கு மேலதிகமாக நிறுவன நிதியத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 5,179,805 ஆன சொத்துக்கள் குறித்த சொத்துக் கணக்குகளில் வரவு வைப்பதற்குப் பதிலாக 03 மூலதன மானிய ஒதுக்கீட்டுக் கணக்குகளில் பாதக மீதியாக குறிப்பிடப்பட்டதன் காரணமாக அப் பாதக மீதி, செலவு செய்த மூலதன மானிய கணக்குகளின் மீதியுடன் பதிலிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தன.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

கீழ் குறிப்பிடப்படும் ஒவ்வொறு கணக்கு விடயங்களின் முன்னாலும் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| முன்னர் கிடைத்த பாடநெறி கட்டண வருமானம் | 13,483,703 | நாளதுவரையாக்கப்பட்ட சரியான பட்டியல்கள் |
| கிடைக்க வேண்டிய பாடநெறி கட்டண வருமானம் | 29,184,568 | |
| ஆண்டிற்குரிய பாடநெறி கட்டண வருமானம் | 64,569,315 | |
| விரிவுரைக் கட்டண செலவிற்கான ஒதுக்கம் | 13,163,275 | ஒதுக்கீடுகளிற்கான விரிவான பட்டியல் |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை.**

2013 ஜுன் 02 திகதிய இலக்கம் PED/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 பந்தி பிரகாரம் எல்லா மேலதிக பணங்கள், நிதி அமைச்சரின் முன்கூட்டிய அனுமதியுடனேயே நிலையான வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள், குறுங்கால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட வேண்டிய போதும், அதற்கு மாற்றமாக அநுமதியின்றி ரூபா 60,000,000 ஆன பணம் அரச வங்கி ஒன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

**2.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

2017 மே 26 திகதி நிறுவன முகாமை சபை 2007 ஆண்டு முதல் 2011 ஆண்டு வரையான காலத்தினுள் மாணவர்களினால் வைப்புச்செய்துள்ள ரூபா 3,661,000 ஆன வாசிகசாலை மற்றும் விஞ்ஞான வைப்புக்களை நிறுவன வருமானத்திற்கு எடுப்பதற்கு அனுமதி வழங்கியிருந்த போதும், அதற்கு மாற்றமாக 2012 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 1,371,600 ஆன பணம் 2017 திசெம்பர் 31 வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

**3 நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 89,663,796 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 43,321,912 ஆனதனால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 46,341,884 ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீண்டுவரும் அரச மானியம் ரூபா 22,159,896 இனாலும் உள்ளக உழைப்பு ரூபா 23,206,992 இனாலும் அதிகரித்தமை மேல் குறித்த வளர்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையிலும் நிதி மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளில் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினை மீண்டும் செம்மையாக்கையில் 2013 ஆம் ஆண்டின் ரூபா 75,057,038 ஆன நிறுவகத்தின் பங்களிப்பு தொடர்ந்து வளரச்சியடைந்து 2017 ஆண்டின் போது ரூபா 165,991,718 ஆக இருந்தது.

**4 செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

**செயலாற்றுகை மற்றும் மீளாய்வு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனம் சட்டபூர்வமற்ற முறையில் நடத்தும் வியாபார நிர்வாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பிற்காக 2004-2014 கல்வி ஆண்டுகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் சித்தியடையாதோர் சதவிதம் 38 முதல் 92 வரையானது. மேலும் 2014 ஆண்டினுள் பதிவுசெய்யப்பட்ட 44 பேர்களில் எந்தவொரு மாணவரும் பரீட்சையில் சித்தியடைந்திருக்கவில்லை.

(ஆ) சர்வதேச மற்றும் தேசிய தரப்படுத்தலில் வெளிநாட்டு மாணவர்களை பதிவு செய்யும் எண்ணிக்கை பிரதான தீர்மான சாதனமொன்றாக கணிக்கப்படுகின்ற போதும், மீளாய்வாண்டில் இரண்டு வெளிநாட்டு மாணவர்கள் மாத்திரமே பதிவு செய்திருந்தனர்.

(இ) நிறுவனம் வெபொமெட்றிக்ஸ் (Webometrics) பிரகாரம் பல்கலைக்கழக சர்வதேச ரீதியான தரப்படுத்தலின் போது, 2016 ஆண்டில் 16,389 ஆவது இடமும் தேசிய ரீதியாக 24 ஆவது இடமும் கிடைத்திருந்ததுடன், 2017 ஆண்டில் முறையே 15,356 மற்றும் 23 ஆவது இடங்கள் கிடைத்திருந்தன.

(ஈ) கடந்த ஆண்டிற்கு ஒப்பாக பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை 85 இனால் குறைந்திருந்தது.

**4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தவிசாளரின் இலக்கம் யூஜீசி/ஐயூஏ/2/பீஜீஎஸ் மற்றும் 2010 ஜூன் 11 திகதிய கடிதம் மூலம் விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவக தொடர்பற்ற பாடநெறிகளை நடாத்தும் சட்டபூர்வ உரிமை இல்லையென இரண்டு சந்தர்பங்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிவித்திருந்த போதும் குறித்த ஆணைக்குழு தீர்மானத்திற்கு மாற்றமாக நிறுவனம் 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலத்தினுள் இப்பாடநெறிக்காக 233 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டு, அதில் 21 மாணவர்களுக்காக வியாபார நிர்வாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு பட்டம் வழங்கப்பட்டிருந்தன.

**4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வியாபார நிர்வாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு (MBA) பாடநெறிக்காக பதிவு செய்யும் மாணவர்களுக்கு புத்தகத் தொகுதியொன்றை வழங்க பாடநெறி கட்டனத்தின் ஒர்பகுதியான ரூபா 100,000 ஆன தொகை மாணவர்களிடமிருந்து அறவிடப்படுவதுடன், அப் பணத்தால் நிறுவனம் வெளித் தரப்பினரிடம் புத்தகங்களை கொள்வனவு செய்து மாணவர்களுக்கு வழங்கிய போதும், 2017 திசெம்பர் 31 திகதி வரை 10 பல பாடங்களுக்குரிய ரூபா 508,739 பெறுமதியான 77 புத்தகங்கள் ஓராண்டிற்கும் அதிக காலம் பாவிக்கப்படாதிருந்தன. அப்புத்தகங்கள் பயனுள்ளவாறு உபயோகிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்தினால் 2012 மற்றும் 2014 ஆண்டுகளினுள் தேவைக்கு அதிகமான புத்தகங்கள் அச்சிடப்பட்டதனால் 2018 ஜனவரி 20 திகதிகளஞ்சியத்தில் மீதியாக இருந்த பலதரப்பட்ட வெளியீடுகளின் பெறுமதி ரூபா 584,721 ஆனது.

**4.4 நிதிக் குறைப் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 02 ஆராய்ச்சி நிதியங்களில் நிலவிய ரூபா 526,022 தொகை மீளாய்வாண்டில் எவ்வித ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படவில்லை.

(ஆ) 2017 ஆண்டில் கட்டிட புனர்நிர்மாணத்திற்காக கிடைத்த ரூபா 2,000,000 அரச மூலதன மானியங்களில் 2017 திசெம்பர் 31 திகதியன்று ரூபா 1,600,000 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.5 பதவியணியினர் நிர்வாகம்**

2003 ஜுன் 02 திகதிய பீஈடி/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.10 ஆம் பிரிவின் பிரகாரம், ஒப்பந்த அல்லது அமைய அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்துவதற்காக திறைசேரி செயளாலரின் அனுமதி பெற வேண்டிய போதும் அதற்கு மாற்றமாக 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலத்தினுள் ஒப்பந்த அடிப்படையில் 05 அலுவலர்களை சேவையில் ஈடுபடுத்தி ரூபா 3,926,585 தொகை சம்பளம் மற்றும் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது.

## 5. நிலையான அபிவிருத்தி

### 5.1 நிலையான அபிவிருத்தி நோக்கினை அடைந்து கொள்ளல்

நிலையான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ''நிகழ்ச்சிநிரல்'' பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன், மீளாய்வாண்டு தொடர்பாக விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் தமது விடய பரப்பிறகு உட்பட்ட கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றி அறிந்திருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை பிரகாரம், ஒவ்வொறு உள்ளக கணக்காய்வு அலகுகளும் தமது நிறுவனத்திற்காக குறித்த திகதிகளில் சமர்ப்பிக்கவேண்டிய அடிப்படை அறிக்கைகள், காலாண்டு அறிக்கைகள் மற்றும் ஆண்டு பொழிப்பறிக்கை என்பவற்றை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

### 6.2 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறை

#### 6.2.1 பெறுகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2006 பெறுகை வழிகாட்டி கோவையின் 4.2.1(அ) பந்தி பிரகாரம் குறைந்த பட்சம் 03 வருட கால எல்லைக்குள் மேற்கொள்ள எதிர்பார்க்கும் பிரதான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன், மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகை திட்டம் பெறுகை கைநூலின் 4.2.1 பந்தியின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனம் 2017 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகை திட்டம் வருடாந்த பாதீட்டிற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பெறுகை திட்டத்திற்கு அமைய மீளாய்வாண்டில் ரூபா 23,981,000 பெறமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்களை பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதும், ரூபா 3,371,463 பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணஙகள் மாத்திரமே பெறப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் பெறுகை திட்டம் கட்டுப்பாட்டு சாதனமாக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஈ) தேவைகளை இனங்காணாது 2017 ஆண்டில் ரூபா 1,290,210 பெறுமதியான 110 நூலக புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதும் அது பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட வருமானங்களையும் செலவினங்களையும் உள்ளபடியான வருமானங்களுடனும் செலவினங்களுடனும் ஒப்பீடு செய்தபோது 34 விடயங்களில் 21 சதவீதம் முதல் 1251 சதவீதம் வரையான வீச்சளவான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | - | சரியான கணக்கீட்டிற்கு தேவையான கொள்ளைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் ஒவ்வொரு பிரிவிற்கும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதி முகாமைத்துவம் | - | குறித்த இலக்கை அடைந்து கொள்ளும் வகையில் மானியம் மற்றும் நிதியங்கள் உபயோகப்படுத்தப்படாமை. |
| (இ) செயற்பாட்டு கட்டுப்பாடு | - | நிதிப் பிரமாணங்கள் மற்றும் குறித்த சுற்றறிக்கைகள் பிரகாரம் புத்தகங்களும் பதிவேடுகளும் பேணப்படாமை. |